# விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, ஆடி - 17 திங்கள் 02.08.2021 மலர் - 2, இதழ் - 118


## பா.ஜ.க நல்லது




விஜயபாரதம்

முகநூல், டுவிட்டர், மைக்ரோசாப்ட், யூடியூப் உள்ளிட்ட அமைப்புகளால், பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட உலகளாவிய இணைய மன்றம் Global Internet Forum to Counter Terrorism (GIFCT). இது, பயங்கரவாதிகள், வன்முறையாளர்கள் போன்றோர் டிஜிட்டல் இணையதளங்களை தவறாக பயன்படுத்துவதை தடுக்க உருவாக்கப்பட்டது. இதன் ஹாஷ் ஷேரிங், டேட்டாபேஸ் வகைபிரித்தலை "விரிவுபடுத்துதல்" என்ற தலைப்பில் 177 பக்க அறிக்கையின் 62 வது பக்கத்தில், ஆஸ்திரேலியா ஃபேர்ஸ்ட் பார்ட்டி, தேசிய சோசலிச இயக்கம் ஆகிய இரண்டு வலதுசாரி குழு ஆகியவற்றுடன் உலகின் மிகப்பெரிய அரசியல் கட்சியான பாரதீய ஜனதா கட்சியை இணைத்து பட்டியலிட்டுள்ளது. இந்த தரவுகளின் அடிப்படையில் பா.ஜ.க, அதன் சித்தாந்தங்கள் மற்றும் செயல்பாடுகளின் அடிப்படையில் பாதுகாப்பான இயக்கமாக வகைபடுத்தப்பட்டுள்ளது. இதில் இடதுசாரி கட்சிகள் பலவும், பயங்கரவாத பட்டியலில் இணைந்துள்ளன.

## கூகுள் பயிற்சி மையம்




மைசூரு பல்கலைக்கழகத்தில், கூகுள் நிறுவனத்தின் சார்பில், புதிதாக 'கிளவுட் கம்ப்யூட்டிங் பயிற்சி' மையம் துவக்கப்பட்டுள்ளது. மைசூரு பல்கலைக்கழக மாணவர்களுக்கு வேலைவாய்ப்புப் பயிற்சியை அளிப்பதற்கு மைசூர் பல்கலைக்கழகத்துடன் இணைந்து கூகுள் நிறுவனம் கிளவுட் கம்ப்யூட்டிங் பயிற்சி மையத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த மையத்தில் இரண்டு பிரிவுகளின் கீழ் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த பயிற்சி பட்டப்படிப்பை முடித்து வெளியே செல்லும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு பெறுவதற்கு பயனுள்ளதாக அமையும் என கூறப்பட்டுள்ளது.

# ஏ.பி.வி.பி. எதிர்ப்பு



விஜயபாரதம்

மத்தியப் பிரதேசம் சாகரில் உள்ள ஹரிசிங் கவுர் மத்திய பல்கலைக்கழகத்தின் மானுடவியல் துறை ஜூலை 30, 31 தேதிகளில், அமெரிக்காவின் மாண்ட்க்ளேர் மாநில பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தப்படவிருந்த 'அறிவியல் உறுதித்தன்மை, சாதனைகளில் கலாச்சாரம், மொழியியலால் ஏற்படும் தடைகள்' என்ற தலைப்பில் இரண்டு நாள் இணையதள கருத்தரங்குக்கு ஏற்பாடு செய்தது. இதில் பேச அழைக்கப்பட்டவர்களில் கௌஹர் ரசா என்பவரும் ஒருவர். இவர், டெல்லி கலவரத்தில் சம்பந்தப்பட்டதாக் குற்றம் சாட்டப்பட்ட அபூர்வானந்த், பயங்கரவாதி அப்சல் குரு போன்றோரின் அனுதாபி. அப்சல் குருவிற்காக 'அஜ்மல் பிரேம்' என்ற கவிதையை எழுதி சமர்பித்துள்ளார். அவரை இந்த நிகழ்ச்சிக்கு அனுமதிக்கக்கூடாது என மாணவர்கள் அமைப்பான அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத் (ஏ.பி.வி.பி) அமைப்பு கண்டனம் தெரிவித்தது. மேலும், பல்கலைக்கழக துனை வேந்தருக்கும் காவல்துறைக்கும் இது குறித்து கடிதம் எழுதியது. காவல்துறையினர் பல்கலைக்கழகத்திற்கு மத மற்றும் ஜாதி உணர்வுகள் புண்படாமல் பார்த்துக் கொள்ளுமாறு கேட்டு ஒரு கடிதம் எழுதினர். இதனையடுத்து பல்கலைக்கழக நிர்வாகம் அந்த கருத்தரங்கை நிறுத்திவிட்டது.

# பூட் ஜோலோகியா மோடி புகழாரம்



விஜயபாரதம்

நாகலாந்தின் டெனிங்கில் இருந்து மிக அதிக காரம் கொண்ட மிளகாயான பூட் ஜோலோகியா என்ற மிளகாய் வகை முதன்முறையாக இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இதற்கு மோடி பாராட்டுத் தெரிவித்தார். அவரது டுவிட்டர் பதிவில் "அற்புதமான செய்தி. பூட் ஜோலோகியாவை சாப்பிட்டவர்களுக்கு மட்டுமே அது எவ்வளவு காரமானது என்று தெரியும்! இது ராஜா மிர்ச்சா அல்லது மிளகாய் அரசன் என்று அழைக்கப்படும் நாக மிளகாய் பற்றியது! இது உண்மையில் மிகவும் காரமானது, தனித்துவ வாசனை கொண்டது என" கூறியுள்ளார். இந்த மிளகாய்க்கு புவிசார் குறியீடு கடந்த 2008ல் வழங்கப்பட்டது. சில வருடங்களுக்கு முன்பு பூட் ஜோலோகியா மிளகாய் ஜப்பானில் ஒரு கிலோவுக்கு ரூ .50,000 க்கு விற்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்த மிளகாயை தொடர்ந்து பயன்படுத்துவதன் மூலம் ஆஸ்துமா நோயாளிகளுக்கு நிவாரணம் கிடைக்கும் என்று வடகிழக்குப் பகுதி மக்கள் நம்புகின்றனர். மேலும், நாகாலாந்தில் இயற்கையாக விளைவிக்கப்பட்ட அன்னாசிப்பழம், நாகா கிவி, இஞ்சி, பெரிய ஏலக்காய் போன்ற பொருட்களுக்கு ஆஸ்திரேலியா, வளைகுடா நாடுகள், ஐரோப்பிய சந்தைகளில் அதிக தேவை இருப்பதாக நாகாலாந்து அரசு அதிகாரிகள் கூறுகின்றனர்.

# பாகிஸ்தானுக்கு ஐ.சி.ஜெ. கண்டனம்

விஜயபாரதம்

சர்வதேச நீதிபதிகள் ஆணையம் (ஐ.சி.ஜெ) என்ற அரசு சாரா சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு ஜெனீவாவை தலைமையிடமாகக்கொண்டு செயல்பகிறது. இது தேசிய மற்றும் சர்வதேச மனித உரிமைகள் தரத்தை உருவாக்கும் மூத்த நீதிபதிகள், வழக்கறிஞர்கள், கல்வியாளர்கள் உட்பட 60 புகழ்பெற்ற சட்ட வல்லுநர்களைக் கொண்ட அமைப்பு. இந்த அமைப்பு சமீபத்தில் பாகிஸ்தானில் மத உரிமைகள் மீறப்படுவது, சிறுபான்மையினர் மீதான தக்குதல்கள், துன்புறுத்தல்கள், அஹமதியா என்ற சக முஸ்லிம் பிரிவினர் மீதான வன்முறைகளை கண்டித்துள்ளது. பாகிஸ்தான் அரசு இந்த அத்துமீறல்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு இவற்றை கண்டுகொள்ளாமல் இருப்பது பாகிஸ்தான் அரசின் தோல்விகளையே காட்டுகிறது என்றும் கூறியுள்ளது.

---

# சீன ஆக்கிரமிப்பு எதிர்ப்பு



விஜயபாரதம்

பாரத திபெத் சஹயோக் மஞ்ச் அமைப்பு என்பது திபெத்திய சுதந்திர இயக்கத்தை ஆதரிக்கும் பாரதத்தவர்களின் ஒரு குடை அமைப்பு. இவ்வமைப்பு வரும் அக்டோபர் 20'ஐ சீன ஆக்கிரமிப்பு, ஆட்சிக்கு எதிரான போராட்ட நாளாக அனுசரிக்க முடிவு செய்துள்ளது. இந்த நிகழ்வில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட சிக்யாங் (மத்திய திபெத்திய நிர்வாகத் தலைவர், தர்மசாலா) பென்பா செரிங் கலந்துகொள்கிறார். உலகம் முழுவதும் உள்ள திபெத்தியர்களுக்கான மிக உயர்ந்த அரசியல் தலைவராக இவர் அங்கீகரிக்கப்படுகிறார். அருணாசலப் பிரதேசத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. 1962ல் இந்த நாளில்தான் சீன அரசின் ராணுவம் லடாக் மற்றும் அருணாச்சல பிரதேசத்தில் ஒரே நேரத்தில் தாக்குதல் நடத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

---

# கனடாவில் தேவை. சி.ஏ.ஏ. சட்டம்



விஜயபாரதம்

கனடாவில் வசிக்கும் சீக்கியர்களின் அமைப்புகளான தி மன்மீத் சிங் புல்லர் அறக்கட்டளை, கல்சா எய்ட் கனடா, கனடாவின் உலக சீக்கிய அமைப்பு (WSO) ஆகியவை இணைந்து சமீபத்தில் ஒரு அறிக்கையை வெளியிட்டன. அதில், 'ஆப்கானிஸ்தானில் நிலைமை நாளுக்கு நாள் தொடர்ந்து மோசமடைந்து வருகிறது. இந்த உள்நாட்டுப் போரில், அதிகம் பாதிப்புக்கு உள்ளாகக்கூடியவர்கள் அங்கு சிறுபான்மையினராக வசிக்கும் சீக்கியர் மற்றும் ஹிந்துக்கள். அவர்களை காக்க கனடா அரசு தன்னால் முடிந்த முயற்சிகளை உடனடியாக எடுக்க வேண்டும். இல்லையெனில், ஆப்கானிஸ்தானில் மீதமுள்ள ஹிந்துக்கள் மற்றும் சீக்கியர்கள் குறிவைக்கப்பட்டு கொல்லப்படுவார்கள். எனவே, பாரதத்தின் சி.ஏ.ஏ போன்ற ஒரு சிறப்புத் சட்டதிட்டத்தை உருவாக்க கனடா முயற்சிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

# தேசிய எதிர்ப்பு இயக்கம்

விஜயபாரதம்

தலிபான்களுக்கு எதிரான போராட்டத்தை வலுப்படுத்த தேசிய எதிர்ப்பு இயக்கம் (NRM) என்ற ஒன்றை ஆரம்பித்துள்ளது. இந்த இயக்கத்தின் கீழ் ஒவ்வொரு கிராமத்தையும், ஒவ்வொரு சமூகத்தையும் தலிபான் களுக்கு எதிரான இந்த போராட்டத்தில் இணைக்க முடிவு செய்துள்ளது. ஆப்கன் அதிபர் கூட்டு ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு வாரியக் கூட்டத்தில் இந்த திட்டத்தை செயல்படுத்த அனுமதி அளித்தார். என ஆப்கானிஸ்தான் துணைத் தலைவர் அம்ருல்லா சலே கூறியுள்ளார். மேலும், ஆப்கானிஸ்தான் அரசு, தலிபான்களுக்கும் அதன் பினாமிகளுக்கும் ஆதரவாளருக்கு அடிபணியாது என்று பாகிஸ்தானை மறைமுகமாக குறிப்பிட்டார். முன்னதாக அவர் தனது முந்தைய டுவிட்டர் பதிவுகளில், 'பாகிஸ்தான் தாலிபான்களுக்கு ஆதரவாக தனது நாட்டில் உள்ள சுமார் 10 ஆயிரம் பயங்கரவாதிகளை ஏற்றுமதி செய்தது. ஆப்கானிஸ்தானில் பயங்கரவாத பிரச்சனையை தீர்க்க பாகிஸ்தான் அரசு மேற்கிலிருந்து ஒரு பில்லியன் டாலர்களை எதிர்பார்க்கிறது. அது இரட்டை நிலைப்பாட்டை கொண்டுள்ளது' என குற்றம் சாட்டியிருந்தார்.

# ஐ.நா. தலைமையேற்கும் பாரதம்



விஜயபாரதம்

இந்த ஆண்டு துவக்கத்தில் ஐ.நா பாதுகாப்பு கௌன்சிலில் தற்காலிக உறுப்பினராக பாரதம் இணைந்தது. இதனைத் தொடர்ந்து, இந்த ஆகஸ்ட் மாதம் முழுவதும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கௌன்சில் கூட்டங்கள் அனைத்தும் பாரதத்தின் தலைமையில் நடைபெறும். மீண்டும் அடுத்து வரும் 2022 டிசம்பரில் இந்தப் பொறுப்பை பாரதம் ஏற்கும். இது குறித்து கருத்துத் தெரிவித்த ஐ.நா.,வுக்கான பாரதத் தூதர் திருமூர்த்தி, 'பாரதத்தின் தலைமையில் நடைபெறும் ஐ.நா பாதுகாப்பு கௌன்சில் கூட்டத்தில் கடல்சார் பாதுகாப்பு, அமைதி பராமரிப்பு, பயங்கரவாதத் தடுப்பு ஆகிய மூன்று முக்கிய அம்சங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். பொறுப்புகளை தோளில் சுமக்க பாரதம் என்றும் அஞ்சியதில்லை. ஆக்கப்பூர்வ செயல்பாடுகளுக்கு முன்னுரிமை அளிப்பதுடன், பிரச்னைகளுக்கு எப்போதும் குரல் கொடுக்கும் பாரதம். நமது நாட்டின் 75வது சுதந்திர தின விழாவில் ஐ.நா பாதுகாப்பு கௌன்சிலில் தற்காலிக உறுப்பினராக இரண்டு ஆண்டுகளில் இரண்டு முறை பாரதம் தலைமை பொறுப்பை வகிக்க இருப்பது பெருமையாக உள்ளது' என தெரிவித்தார்.

## ஒலிம்பிக்கில் பதக்கம்

டோக்கியோவில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் போட்டிகளில் பேட்மிண்டன் பிரிவில் பி.வி.சிந்து வெண்கலப் பதக்கம் வென்றார். வாழ்த்துகள்



# பிங்கிலி வெங்கய்யா



விஜயபாரதம்

ஆந்திர மாநிலம் கிருஷ்ணா மாவட்டத்தில் 1878ல் பெடகள்ளேபள்ளி என்ற கிராமத்தில் பிறந்தவர் வெங்கய்யா. இந்திய தேசிய ராணுவத்தில் சேருமாறு இளைஞர்களுக்கு சுபாஷ் சந்திர போஸ் விடுத்த அழைப்பை ஏற்று, 19வது வயதில் ராணுவப் பயிற்சி பெற்று, ஆப்பிரிக்காவில் நடந்த போயர் யுத்தத்தில் பங்கெடுத்தார் வெங்கய்யா. தனது இளமை பருவத்தில் நேதாஜியை பின்பற்றிய வெங்கய்யா பின்னாளில் தென் ஆப்பிரிக்காவில் தங்கியிருந்தபோது காந்தியைச் சந்தித்தார்.

பாரதம் திரும்பியதும் அங்கிலேய ஆட்சிக்கு எதிரான தலைமறைவு இயக்கங்களில் பங்கெடுத்துக்கொண்டார். இளமைக் காலத்திலிருந்து வேளாண்மையின் மீது ஒரு தீவிர ஆர்வம் அவருக்கு இருந்தது. இதன் காரணமாக பருத்திச் சாகுபடியில் கவனம் செலுத்தினார். வேளாண் துறையில் புதிய பரிசோதனைகளில் ஈடுபட்டார். கம்போடிய பருத்தி விதைகளையும் நமது பருத்தி விதைகளையும் கொண்டு புதிய பருத்தி ரகங்களை உருவாக்கினார்.

லாகூருக்குச் சென்று சம்ஸ்கிருதம், உருது, ஜப்பானிய மொழிகளைக் கற்றுக்கொண்டார். 1916ல் பாரதத்துக்கு ஒரு தேசியக் கொடி (எ நேஷனல் ப்ளாக் ஃபார் இந்தியா) என்ற புத்தகத்தை எழுதி வெளியிட்டார். தேசியக் கொடிக்கான 13 வடிவமைப்புகளைக் கொண்டிருந்தது அந்தப் புத்தகம். 1918 முதல் 1921வரை காங்கிரஸின் ஒவ்வொரு கூட்டத்திலும் பாரதத்திற்கென ஒரு தனிக் கொடி வேண்டும் என்று தொடர்ந்து வேண்டுகோளை விடுத்தார். அப்போது ஆந்திர தேசியக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார் வெங்கய்யா.

விஜயவாடாவில் காந்தியைச் சந்தித்தார். அப்போதும் தேசியக் கொடி பற்றியே பேசினார். காந்தி கேட்டுக்கொண்டதற்கு இணங்க, ஒரே இரவில் தேசியக் கொடியை உருவாக்கி காங்கிரஸ் கூட்டத்தில் அறிமுகப்படுத்தி காந்தியிடம் ஒப்புதலையும் பெற்றார். வெங்கய்யா.

1947ல் தீவிர அரசியலிலிருந்து விலகினார். தான் இறந்த பிறகு தன்னைத் தேசியக் கொடியால் மூட வேண்டும் என்று விரும்பினார். அதன்படி, 1963ல் அவர் காலமானபோது, அவர் வடிவமைத்த தேசியக் கொடி அவர் மீது போர்த்தப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது. பிங்கிலி வெங்கய்யா வடிவமைத்த கொடியில், வெண்மை நிறத்தின் நடுவே முதலில் கைராட்டை சின்னம்தான் இருந்தது. பின்னர், அது அசோக சக்கரமாக மாற்றப்பட்டது.

# தயாநிதிக்கு அண்ணாமலை பதிலடி



விஜயபாரதம்

மேகதாது அணை விவகாரத்தில் தமிழக விவசாயிகளுக்கு ஆதரவாக இருப்போம் எனக் கூறிய மாநில பாஜக தலைவர் அண்ணாமலை, இதற்காக ஆகஸ்ட் 5ம் தேதி கர்நாடகா அரசுக்கு எதிராக போராட்டத்தை அறிவித்தார். இதனால், தங்களுக்கு மட்டுமே சொந்தம் என கருதிய 'எதிர்ப்பு அரசியல்' தங்கள் கையை விட்டு நழுவுவதை சகிக்க முடியாத அரசியல் கட்சிகள் இதனை விமர்சித்தன. இது குறித்து பேட்டியளித்த தி.மு.க எம்.பி தயாநிதி மாறன், 'கர்நாடக முதல்வருடன் பேச்சுவார்த்தை நடத்த மாவீரன் அண்ணாமலையை தூதுவராக அனுப்புவோம்' என கூறினார். தயாநிதியின் இந்த கருத்துக்கு பதில் அளித்துள்ள பா.ஜ.க தலைவர் அண்ணாமலை, 'கொரோனா நோய்தொற்று பாதிப்பில் மக்கள் துன்புற்று இருந்தபோது, டி20 விளையாட்டுப் போட்டியை ரசித்துக்கொண்டிருந்த தயாநிதி மாறன், மேகதாது அணை பற்றி கவலைப்பட்டமைக்கு மிக்க நன்றி. தங்கள் சிறப்பு விமானத்தை அனுப்பி வைத்தால் நம் மாநில ஏழை விவசாயிகளை அழைத்துக்கொண்டு தூது செல்ல நான் தயார். இதை அவரது மாமா மு.க. ஸ்டாலின் அனுமதிப்பாரா?' என கேட்டுள்ளார்.

# உணவக உரிமம் ரத்து



விஜயபாரதம்

தமிழகத்தில் கடந்த சில தினங்களாக கொரோனா பாதிப்பு மீண்டும் அதிகரித்து வருகிறது. இதையடுத்து தமிழக அரசு கொரோனா தடுப்பு பணிகளை துரிதப்படுத்தும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது. சென்னையில் மக்கள் கூடும் முக்கிய பகுதிகளில் உள்ள கடைகள் மூடப்பட்டன. சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் 2 ,608 மண்டபங்கள், உணவகங்களில் ஆய்வு மேற்கொண்டு, 57 இடங்களில் விதிமீறல்கள் கண்டறியப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டது. மேலும், உணவகங்களில் 50 சதவீத இருக்கைகளில் மட்டுமே பொதுமக்கள் அமர்ந்து உணவருந்த அனுமதிக்க வேண்டும். மீறும் உணவகங்களுக்கு அபராதம் விதிக்கப்படும், தொழில் உரிமம் ரத்து செய்யப்படும் என்றும் மாநகராட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

# ஹிந்துக்களை வஞ்சிக்கும் கேரள அரசு



கேரளாவில் கொரோனா பரவல் கட்டுப்படுத்தப்படாத நிலையிலும், முஸ்லிம்களின் பண்டிகையான பக்ரீத்தை முன்னிட்டு கடந்த மாதம் ஜூலை 18 முதல் 21வரை மூன்று நாட்கள் தளர்வுகளை அறிவித்தது ஆளும் கம்யூனிச அரசு. முஸ்லிம்களை திருப்திப்படுத்த மக்களின் உயிர் பணயம் வைக்கப்பட்டது. இந்த ஓட்டு வங்கி அரசியலால் பக்ரீத் அம்மாநிலத்தில் சூப்பர் ஸ்ப்ரெடராக உருவெடுத்தது. இதனால் அந்த சிறிய மாநிலத்தில் பாரதத்திலேயே அதிகமாக தினம்தோறும் 20 ஆயிரத்திற்கும் அதிகமாக கட்டுப்படுத்தமுடியாத அளவிற்கு கொரோனா பரவல் அதிகரித்துள்ளது.

விஜயபாரதம்

இந்நிலையில், இன்னும் சில நாட்களில் அங்கு ஹிந்துக்கள் பெரிய விழாவான ஓணம் திருநாள் கொண்டாடப்பட உள்ளது. இந்த சூழலில், அம்மாநில அரசு, மக்கள் கூட்டத்தை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும், குடும்பத்தில் சிறு குழந்தைகள் இருந்தால் உறவினர்கள், நண்பர்களை சந்திப்பதை மக்கள் தவிர்க்க வேண்டும் என கூறியுள்ளது. இது கம்யூனிச அரசின் ஹிந்து விரோத மனநிலையையே வெளிச்சம் போட்டுக்காட்டுகிறது.

சமீபத்தில் உத்தராகண்ட், உ.பி.,யில் கொண்டாடப்படும் ஹிந்துக்களின் பண்டிகையான கன்வார் யாத்திரை உள்ளிட்ட கொண்டாட்டங்கள் மீது தானாக வழக்குப்பதிவு செய்து விசாரித்த உச்ச நீதிமன்றம், அவற்றை ரத்து செய்ய உத்தரவிட்டது. ஆனால், கேரளா அரசு அறிவித்த பக்ரீத் தளர்வுகளை குறித்து கடுமையான நிலைப்பாட்டை எடுக்கத் தவறிவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# மதமாற்றத்தால் நாடு பலவீனமடையும்



விஜயபாரதம்

ஒரு பெண்ணை கட்டாயப்படுத்தி முஸ்லிமாக மதமாற்றம் செய்த வழக்கை விசாரித்த அலகாபாத் உயர் நீதிமன்றம், அதனை செய்த குற்றவாளி ஜாபித் அன்சாரியின் ஜாமீன் மனுவை நிராகரித்தது. நாட்டின் பெரும்பான்மை மக்களை மதம் மாற்றுவதற்கு கடும் ஆட்சேபனை தெரிவித்தது. அப்போது இது குறித்து கருத்து தெரிவித்த நீதிபதி, 'திருமணத்திற்காக மட்டும் மத மாற்றம் செய்வது இந்திய அரசியலமைப்புக்கு எதிரானது. மதம் என்பது ஒரு வாழ்க்கை முறை. பாரதம் பல மதங்களை கொண்டுள்ளது. இங்கு மத வெறி, பேராசை, பயத்திற்கு இடமில்லை. இந்திய அரசியலமைப்பு இந்த காரணிகளின் அடிப்படையில் மதமாற்றத்தை அனுமதிக்காது. இதுபோன்ற வழக்குகளில் ஜாமீன் வழங்கப்பட்டால், ஏழைகள், பெண்களை மிரட்டும் அல்லது கவர்ந்திழுக்கும் மத வெறியர்களுக்கு இது அதிக சக்தியை வழங்கும்' என தெரிவித்தார். மேலும், 'ஒருவர் புறக்கணிக்கப்பட்டால் அல்லது அவமதிக்கப்பட்டால் அவரது வீட்டை விட்டு வெளியேறுவார். அதேபோல, யாராவது அவருடைய மதத்தில் அவமதிக்கப்படுகிறார்கள் என்றால், அவர்கள் மதம் மாற உரிமை உண்டு. ஆனால், மதம் மாற்றினால், நாடு பலவீனமடையும். அழிவு சக்திகள் அதனால் பயனடைகின்றன' என கூறினார்.

# 24 மணிநேர பணப் பட்டுவாடா

விஜயபாரதம்

ரிசர்வ் வங்கி கவர்னர் சக்திகாந்த தாஸ் கடந்த ஜூனில் வெளியிட்ட பணக் கொள்கை அறிக்கையில் ஆகஸ்ட் 1 முதல், 'நாச்' (National Automated Clearing House NACH) எனப்படும் தேசிய தானியங்கி பணப்பட்டுவாடா மையத்தின் சேவைகள், 24 மணி நேரமும் கிடைக்கும் என, தெரிவித்திருந்தார். அதன்படி நேற்று முதல் வங்கி வாடிக்கையாளர்களின் கணக்கில் வாரத்தின் ஏழு நாட்களும், 24 மணி நேரமும் பணம் செலுத்தும் வசதி அறிமுகமாகியுள்ளது. பொதுமக்கள் ஊதியம், ஓய்வூதியம் பெற இதுவரை ஞாயிறு, அரசு விடுமுறை தினங்களில் காத்திருக்க வேண்டியிருந்தது. அந்த பிரச்சனைக்கு தற்போது முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. மாதத் தவணை செலுத்துவது உள்ளிட்ட பரிவர்த்தனைகளையும் வாடிக்கையாளர்கள் விடுமுறை நாட்களில் தடையின்றி மேற்கொள்ளலாம்.

# பயங்கரவாதி என்கௌண்டரில் கொலை




விஜயபாரதம்

ஜெய்ஷ்இமுகமது தலைவர் மசூத் அஸாரின் மருமகன் சைஃபுல்லா, ஜம்முகாஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தில் நடந்த எங்கௌண்டரில் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டாரன். முன்னதாக இவன் ஏழு என்கௌண்ட்டர்களில் இருந்து தப்பித்திருந்தான். மேம்படுத்தப்பட்ட வெடிக்கும் சாதனம் எனப்படும் ஐ.இ.டி தயாரிப்பு நிபுணனான இவன், புல்வாமாவில் 40 சி.ஆர்.பி.எப் வீரர்களைக் கொன்ற அடில் அஹமது தார் ஜெய்ஷ் உள்ளிட்ட பயங்கரவாதிகளுக்கு பயிற்சி அளித்தவன். பயங்கரவாத அமைப்பில் இளைஞர்களை மூளைச்சலவை செய்து பணியமர்த்தும் பொறுப்பில் ஈடுபட்டிருந்தான். கொல்லப்பட்ட சைபுல்லாவிடம் இருந்து ஒரு சீன கைத்துப்பாக்கியும் ஒரு ஏகே 47 துப்பாக்கியும் மீட்கப்பட்டது. இந்த பயங்கரவாதியைக் கொன்றதன் மூலம் இந்த என்கௌண்டர் இந்த ஆண்டின் மிகப்பெரிய நடவடிக்கைகளில் ஒன்றாக கருதப்படுகிறது. இது போன்ற முக்கிய பயங்கரவாதத் தலைவர்கள் கொல்லப்படுவதால் இப்பகுதியில் விரைவில் அமைதி திரும்பும் என எதிர்பார்க்கலாம்.

## உயரும் ஏ.டி.எம். கட்டணம்



விஜயபாரதம்

வங்கிகள் இடையே ஏ.டி.எம் பயன்பாட்டுச் செலவு அதிகரித்து வருவதால், பரிவர்த்தனை கட்டணத்தை உயர்த்த ரிசர்வ் வங்கி அனுமதி அளித்தது. அதன்படி, நேற்று முதல் கணக்கு வைக்காத வங்கி ஏ.டி. எம்மில் மேற்கொள்ளப்படும் பரிவர்த்தனைக்கு வங்கிகளுக்கு இடையேயான கட்டணம் 15 ரூபாயில் இருந்து 17 ஆக உயர்ந்தது. கணக்கு வைத்துள்ள வங்கியின் பிற கிளைகளில் மேற்கொள்ளும் நிதியில்லாத பரிவர்த்தனைக்கு கட்டணம் 5 ரூபாயில் இருந்து 6 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அதேபோல, தபால் துறை வீடு தேடி அளிக்கும் வங்கிச் சேவைகளுக்கு சேவைக் கட்டணம் அமலாகியது. பரிவர்த்தனை மதிப்புக்கேற்ப இதற்கான கட்டணம் வசூலிக்கப்படும்.

## 1 லட்சம் கோடியை கடந்த ஜி.எஸ்.டி




விஜயபாரதம்

கடந்த ஜூலை மாதம் ஜி.எஸ்.டி ரூ. 1.16 லட்சம் கோடி வசூலாகியுள்ளது. இது கடந்த 2020ம் ஆண்டு ஜூலை மாதம் வசூலான தொகையை விட 33 சதவீதம் அதிகம். தொடர்ச்சியாக 8 மாதங்களாக ஜி.எஸ்.டி வசூல் ரூ. 1 லட்சம் கோடியை தாண்டியுள்ளது. ஆனால் கடந்த மே மாதத்தில் விதிக்கப்பட்ட ஊரடங்கு கட்டுப்பாடுகள் காரணமாக, ஜூன் மாத ஜி.எஸ்.டி வசூல் ரூ. 1 லட்சம் கோடிக்கு கீழே சென்றது. தற்போது, மீண்டும் தளர்வுகள் அளிக்கப்பட்டதால், ஜி.எஸ்.டி வசூல் மீண்டும் ரூ.1 லட்சம் கோடியை தாண்டியது. இது, நமது பாரதப் பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வருவதையே குறிக்கிறது.

## பாரதம் குறித்து ஜோதிடர் கணிப்பு



விஜயபாரதம்

வங்கிகள் பிரபல ஜோதிடர் அனிருத் குமார் மிஸ்ரா, காங்கிரஸ் ஆட்சி காலத்தில் பாரதம் இழந்த பகுதிகளை இன்றைய புதிய பாரதம் மீண்டும் மீட்கும் என்று கணித்துக் கூறியுள்ளார். அவரின் கணிப்பின்படி, வரும் செப்டம்பர் 2030க்குள்ளாக கில்ஜித், பால்டிஸ்தான் உட்பட பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகளை பாரதம் மீட்க்கும். வரும் 2032க்குள் சீனாவிடம் இழந்த அக்சாய் சின் பகுதியை மீட்க்கும் என்று தெரிவித்துள்ளார். 'இரண்டாவது முறையாக மத்தியில் பா.ஜ.க ஆட்சியை பிடிக்கும், மீண்டும் பிரதமராக மோடி தொடர்வார், கொரோனா மூன்றாவது அலையை பாரதம் பார்க்காது, பாரதத்தின் தற்போதைய தொற்று நோயின் விளைவு ஜூலைவரை நீடிக்கும், வரும் ஜூலை அல்லது நவம்பரில் இருந்து பாரதம் மீண்டும் ஆரோக்கியமான நிலைக்கு திரும்பும் என்று இதற்கு முன்பு அனிருத் குமார் மிஸ்ரா சில கணிப்புகளை கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆற்றலை அருளும் ஆடிக்கிருத்திகை


விஜயபாரதம்

இன்று ஆடிக்கிருத்திகை. பொதுவாக, கிருத்திகை நட்சத்திரம் என்பதே முருகன் வழிபாட்டுக்கு உகந்த நட்சத்திரம். அதிலும் தெய்வ வழிபாடுகள் செய்ய உகந்த ஆடி மாதத்தில் வரும் கிருத்திகை மிகவும் சிறப்புக்குரியது. கிருத்திகை என்பது ஆறு நட்சத்திரக் கூட்டத்தின் பெயர். சிவபெருமானின் அருளால் தோன்றிய முருகனை, வளர்த்த கார்த்திகைப் பெண்களே கிருத்திகை நட்சத்திரங்களாக ஒளிவீசுகிறார்கள்.

அவர்களால்தான் முருகன் கார்த்திகேயன் என்ற பெயரும் பெற்றான். முருகப்பெருமானை தாயாக இருந்து வளர்த்த அவர்களுக்கு உரிய தினத்தில் முருகனை வழிபட்டால் முருகன் மகிழ்வான், வேண்டும் வரம் தருவான்.

வருடத்தில் மூன்று கார்த்திகை தினங்கள் முக்கியத்துவம் பெறும். உத்ராயண துவக்கமான தை மாதம் வரும் தை கிருத்திகை, கார்த்திகை மாதம் வரும் பெரிய கிருத்திகை, தட்சிணாயன துவக்கமான ஆடி மாதத்தில் வரும் ஆடிக்கிருத்திகை. இந்த மூன்றும் கார்த்திகேயக் கடவுளுக்கு உகந்த நாட்கள்.

ஜோதிடத்தில் கிருத்திகை நட்சத்திரம் சூரியபகவானுக்குரிய நட்சத்திரம். சூரியனே நமது ஆரோக்கியத்துக்கு அதிபதி. எனவே, கிருத்திகை நட்சத்திர நாளில் முருக வழிபாடு செய்வதால் நீடித்த ஆயுளுடன் நிலையான ஆரோக்கியத்தையும் பெறலாம். எனவே, இன்று முருகனது சடாட்சர மந்திரமான, `சரவணபவ', கந்த சஷ்டி கவசம், கந்த குரு கவசம், வேல் வகுப்பு, வேல்மாறல், திருப்புகழ் போன்றவற்றை பாராயணம் செய்வோம். அவனருள் பெறுவோம்.

கார்த்திகை நட்சத்திரத்தில் தானம் செய்யும் எஜமானனும் அவரது பரம்பரையினர்களும் அளவற்ற நன்மைகளை அடைகிறார்கள் என்பது ஐதீகம். வழக்கமாக இந்த நாளில் முருகப்பெருமானின் ஆலயங்கள் பால்குடங்கள், காவடிகள் என களைகட்டும். ஆனால், கொரோனா காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளாக அத்தகைய கொண்டாட்டங்கள் இன்றி விழாக்கள் வந்து செல்கின்றன.

இந்தநிலை விரைவில் மாற வேண்டும். அடுத்து வரும் நமது விழாக்கள் முன்பை போலவே வெகுவிமர்சையாக நடைபெற வேண்டும், அனைவருக்கும் அனைத்து நலங்களையும் வளங்களையும் முருகப்பெருமான் அருள வேண்டும் என இந்த நாளில் முருகப்பெருமானை வேண்டி வழிபடுவோம்.

**ஓம் சரவணபவ**

ஜெ.எஸ் ஸ்ரீதரன்

# வலையில் சிக்கிய மீம்கள்




